கர்நாடக வனப்பகுதியில் 3 தமிழர்கள் சுட்டுக் கொல்லப்பட்டது கண்டனத்துக்குரியது!

# மேகதாது விவகாரம் போல் வாய்மூடி இருக்காமல் கர்நாடக அரசுக்கு கண்டனத்தைப் பதிவு செய்திட வேண்டும்!

## த.வெ.க. அரசுக்கு கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அறிவுறுத்தல்!

**சென்னை, ஆக.18 -**

**கர்நாடக வனப்பகுதியில் 3 தமிழர்களை அம்மாநில வனத்துறை சுட்டுக் கொன்றிருப்பது கண்டனத்துக்குரியது என்று தெரிவித்துள்ள கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள், "மேகதாது விவகாரம் போல வாய்மூடி இருக்காமல், இச்சம்பவத்தில் த.வெ.க. அரசு கர்நாடக அரசுக்கு தனது கண்டனத்தைப் பதிவு செய்திட வேண்டும்" என்று தமது சமூக வலைதளப்பதிவில் குறிப்பிட்டுள்ளார்.**



இது குறித்து கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைத்தளப் பதிவு வருமாறு:-

கர்நாடக வனப்பகுதியில் தமிழர்கள் மூவரை அம்மாநில வனத்துறையினர் அநியாயமான முறையில் சுட்டுக் கொன்றிருக்கும் சம்பவம் அதிர்ச்சியளிக்கிறது. மனித உயிர்கள் குறித்த எந்த மதிப்பும் இல்லாமல் நிகழ்த்தப்பட்டிருக்கும் இந்தக் கொடூரச் செயல் கடும் கண்டனத்துக்குரியது.

குற்றமிழைத்தவர்களைக் காப்பாற்றுவதற்கான முயற்சிகளில் கர்நாடக வனத்துறையினர் ஈடுபடுவதாகத் தெரிகிறது. அது தவிர்க்கப்பட்டு, இதனைக் கொலை வழக்காகப் பதிந்து, வெளிப்படைத் தன்மை மிக்க, பாரபட்சமற்ற நீதி விசாரணை நடைபெற்று இதற்குக் காரணமானவர்கள் தண்டிக்கப்பட வேண்டும். அப்போதுதான் இனி இப்படி ஒரு குற்றத்தில் ஈடுபடும் துணிச்சல் எவருக்கும் வராது.

மேகதாது விவகாரம் போல இதிலும் வாய்மூடி இருக்காமல், இச்சம்பவத்தில் தமிழ்நாடு அரசு கர்நாடக அரசுக்குத் தனது கண்டனத்தைப் பதிவுசெய்திட வேண்டும்.

உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு உரிய இழப்பீட்டுத் தொகையைப் பெற்றுத் தருவதோடு, அவர்களுக்கு அரசுப் பணியும் கிடைக்கச் செய்ய தமிழ்நாடு அரசு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்."

இவ்வாறு கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பதிவிட்டுள்ளார்.

த.வெ.க. ஆட்சியில் – கல்வி நிறுவனங்களில்

# போதைப் பொருள்களின் பயன்பாடு அதிகரித்துள்ளது கண்டனத்திற்குரியது!

## நடவடிக்கை எடுக்காத த.வெ.க. அரசுக்கு எஸ்.ஆஸ்டின் எம்.எல்.ஏ. கண்டன அறிக்கை!

சென்னை, ஆக. 18-

த.வெ.க. ஆட்சியில் கல்வி நிறுவனங்களில் போதைப் பொருட்களின் பயன்பாடு அதிகரித்துள்ளது. இதற்கு உரிய நடவடிக்கை எடுக்காத இந்த அரசை வன்மையாக கண்டிக்கிறேன் என நாகர்கோவில் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.ஆஸ்டின் கண்டன அறிக்கையில் தெரிவித்துள்ளார்.



அவரது அறிக்கை வருமாறு:-

தக்கலை அரசு மேல்நிலைப்பள்ளியில் சில மாணவிகள், பள்ளி வளாகத்திலேயே மதுபானம் அருந்தியதாக வெளியாகியுள்ள தகவலும், அது தொடர்பான வீடியோ சமூக வலைதளங்களில் பரவியிருப்பதும் மிகுந்த அதிர்ச்சியையும் கவலையையும் ஏற்படுத்தியுள்ளது.

**ஆன்லைனில் மதுபானம் ஆர்டர் எந்த வகையான சமூக முன்னுதாரணம்!**

மாணவர்களின் எதிர்காலத்தை உருவாக்க வேண்டிய பள்ளி வளாகமே இது போன்ற சம்பவங்களுக்கு இடமாக மாறியிருப்பது மிகவும் கண்டிக்கத்தக்கது. ஒருபுறம், பள்ளி மாணவர்களிடம் மதுபானம் மற்றும் போதைப்பொருட்களின் தாக்கம் குறித்து அரசு விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டிய நிலையில், மறுபுறம் TASMAC மதுபானங்களை ஆன்லைனில் ஆர்டர் செய்து வாங்கும் வசதியை அறிமுகப்படுத்தியிருப்பது எந்த வகையான சமூக முன்னுதாரணத்தை உருவாக்குகிறது என்ற கேள்வி எழுகிறது. தற்போதைய TVK அரசு TASMACல் ஆன்லைன் ஆர்டர் மற்றும் டிஜிட்டல் பணப்பரிவர்த்தனை மூலம் கடையில் பெற்றுக்கொள்ளும் வசதியை அறிமுகப்படுத்தியுள்ளது.

மதுபான விற்பனையை அதிகப்படுத்துவதில் காட்டப்படும் வேகத்தைவிட, மாணவர்களை மதுபானம் மற்றும் போதைப்பொருட்களிலிருந்து பாதுகாப்பதில் அரசு அதிக அக்கறை காட்ட வேண்டும். இதனுடைய தொடர்ச்சி ஆன்லைன் டெலிவரி செயலிகள் (Online Delivery Apps) மூலம் மதுபானங்களை டோர் டெலிவரி செய்யும் நிலைக்கு கொண்டு செல்லும் இது இளைய சமுதாயத்தினர் வாழ்வை மேலும் சீரழித்து விடும். பள்ளிகளைச் சுற்றியுள்ள பகுதிகளில் மதுபானம் மற்றும் போதைப்பொருட்கள் சட்டவிரோதமாக சிறார்களுக்கு விற்பனை செய்யப்படுகிறதா என்பது குறித்து காவல்துறையும் சம்பந்தப்பட்ட துறைகளும் தொடர் மற்றும் தீவிர சோதனைகளை மேற்கொள்ள வேண்டும்.

மேலும், இந்தச் சம்பவத்தின் பின்னணி குறித்து முழுமையான விசாரணை நடத்தி, மாணவர்களுக்கு மதுபானம் கிடைக்க காரணமானவர்கள் யாராக இருந்தாலும், அவர்கள் மீது சட்டப்படி கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும். அதே நேரத்தில், மாணவர்களை அவமானப்படுத்துவதோ அல்லது சமூக வலைதளங்களில் அவர்களின் அடையாளத்தை வெளிப்படுத்துவதோ கூடாது. அவர்களுக்கு தேவையான ஆலோசனை, விழிப்புணர்வு மற்றும் உளவியல் வழிகாட்டுதலை வழங்குவதும் அரசின் கடமையாகும்.

**போதைப் பொருள் தடுப்பு சிறப்புப் பிரிவு என்ன ஆனது?**

மாணவர்களின் எதிர்காலத்தை பாதுகாப்பதே அரசின் முதல் கடமை. பள்ளிகள் கல்விக்கூடங்களாக இருக்க வேண்டும். மதுவுக்கும் போதைக்கும் இடமாக மாறக்கூடாது. த.வெ.க. ஆட்சியில் கல்வி நிறுவனங்களில் போதைப் பொருட்களின் பயன்பாடு அதிகரித்துள்ளது. வன்மையாக இதற்கு உரிய நடவடிக்கை எடுக்காத இந்த அரசை கண்டிக்கிறேன்.

முதலமைச்சர் ஆட்சிப் பொறுப்பேற்றுடன் கையெழுத்திட்ட மூன்று அறிவிப்புகளில் ஒன்றான போதைப் பொருள் தடுப்பு சிறப்பு பிரிவு என்ன ஆனது? அது செயலிழந்திருப்பதையே இதுபோன்ற சம்பவங்கள் உணர்த்துகிறது. இந்த விவகாரத்தில் தமிழக அரசு உடனடியாக தலையிட்டு, பள்ளி மாணவர்களின் பாதுகாப்பிற்கும் போதைப்பொருள் தடுப்பிற்கும் கடுமையான மற்றும் நிரந்தர நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு எஸ்.ஆஸ்டின் எம்.எல்.ஏ. தமது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

கோவை தனியார் கல்லூரி மாணவர் அமுதன் படுகொலைக்கு நீதி கேட்டு

# ஒருங்கிணைந்த கள்ளக்குறிச்சி மாவட்ட தி.மு.க. சார்பில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்!

## மாவட்டக் கழகச் செயலாளர் வசந்தம் க.கார்த்திகேயன் எம்.எல்.ஏ. தலைமையில்!

கள்ளக்குறிச்சி,ஆக.18–

கோவையில் உள்ள தனியார் பொறியியல் கல்லூரியில் படித்த கள்ளக்குறிச்சி மாவட்டம், வடக்கநந்தல் பகுதியை சேர்ந்த மாணவர் அமுதன் படுகொலை செய்யப்பட்டதற்கு நீதி விசாரணை கோரியும், போதைப் பொருட்களை தடுக்க தவறிய தவெக அரசை கண்டித்தும் ஒருங்கிணைந்த கள்ளக்குறிச்சி மாவட்ட தி.மு.க. மற்றும் அதன் தோழமை கட்சிகளின் சார்பில் கள்ளக்குறிச்சி கச்சேரி சாலை பகுதியில், தெற்கு மாவட்ட செயலாளரும், ரிஷிவந்தியம் தொகுதி சட்டமன்ற உறுப்பினருமான வசந்தம் க.கார்த்திகேயன் தலைமையில் ஆகஸ்ட் 16 ஞாயிற்றுக்கிழமை அன்று மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.



இதில் கள்ளக்குறிச்சி வடக்கு மாவட்ட செயலாளர் தா.உதயசூரியன், கள்ளக்குறிச்சி எம்.பி.தே. மலையரசன், உளுந்தூர்பேட்டை எம்.எல்.ஏ. ஜி.ஆர்.வசந்தவேல் ஆகியோர் முன்னிலை வகித்து கண்டன உரையாற்றினர்.

ஆர்ப்பாட்டத்தில், நீதிவேண்டும், நீதி வேண்டும் மாணவர் அமுதன் படுகொலைக்கு நீதி வேண்டும், கண்டிக்கிறோம் கண்டிக்கிறோம் போதை பொருட்களை தடுக்கத் தவறிய காவல்துறையை வன்மையாகக் கண்டிக்கிறோம்.

நீதி எங்கே, நீதி எங்கே அமுதன் படுகொலைக்கு நீதி எங்கே, தமிழக அரசே தவெக அரசே மாணவன் அமுதன் படு கொலையை கோஷ்டி பூசலாக மாற்றாதே, சட்டம் ஒழுங்கு சீர்குலைத்து தமிழ்நாட்டை கொலை, கொள்ளை மாநிலமாக மாற்றிய தவெக அரசை கண்டிக்கிறோம் என பல்வேறு கண்டன கோஷங்களை எழுப்பினர்.

இந்த கண்டன ஆர்ப்பாட்டத்தில் மாநில மகளிர் அணி துணை செயலாளர் அங்கையற்கண்ணி, மாநில நிர்வாகி பெருநற்கில்லி, தெற்கு மாவட்ட அவைத்தலைவர் ராமமூர்த்தி, தே.மு.தி.க. மாவட்ட செயலாளர் கருணாகரன், மனிதநேய மக்கள் கட்சி மாவட்ட செயலாளர் முகமது அலி, தந்தை பெரியார் திராவிடர் கழக மாவட்ட செயலாளர் பிரபு, பொதுக்குழு உறுப்பினர் மணிமாறன், மாவட்ட துணை செயலாளர்கள் வாணியந்தல் ஆறுமுகம், புவனேஸ்வரி பெரு மாள், திருநாவுக்கரசு, தெற்கு மாவட்ட மருத்துவர் அணி தலைவர் இளங்கோவன், ஒன்றிய செயலாளர்கள் சத்தியமூர்த்தி, அன்புமணிமாறன், அரவிந்தன், நெடுஞ்செழியன், கனகராஜ், அண்ணாதுரை, பெருமாள், அய்யனார், கிருஷ்ணமூர்த்தி, ராஜவேல், முருகன், வைத்திய நாதன், சந்திரசேகரன், வடக்கு மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் அருள், தேமுதிக ஒன்றிய செயலாளர் நல்லதம்பி உள்பட திமுக மற்றும் கூட்டணி கட்சி நிர்வாகிகள் என 5 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் கலந்து கொண்டனர்.

ஆர்ப்பாட்டத்தில் முடிவில் கள்ளக்குறிச்சி தெற்கு மாவட்ட துணை செயலாளர் காமராஜ் நன்றி கூறினார்.

த.வெ.க. அரசின் 100 நாள் ஆட்சியில்

# ஏதாவது ஒரு சாதனை செய்துள்ளார்கள் என சொல்ல முடியுமா?

## காட்பாடியில் கழக பொதுச் செயலாளர் – முன்னாள் நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் பேட்டி!

**வேலூர், ஆக.18 -**

**கர்நாடகாவில் மேகதாது அணையை கட்டினால் தமிழ்நாட்டிற்கு தண்ணீரே வராது என காட்பாடியில் கழக பொதுச் செயலாளர், முன்னாள் நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் கூறினார்.**



தி.மு.க. பொதுச்செயலாளரும், முன்னாள் நீர்வளத்துறை அமைச்சருமான துரைமுருகன் காட்பாடி காந்திநகரில் நிருபர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது அவரிடம் நிருபர்கள் கேட்ட கேள்விகளும், அதற்கு அவர் அளித்த பதிலும் வருமாறு;

**கேள்வி:** *கர்நாடகாவில் இருந்து திறக்கப்படும் நீரின் அளவு தமிழகத்திற்கு வரும் போது குறைந்து வருவது குறித்து?*

**பதில்;** கர்நாடக பகுதியில் ஒருவேளை நீர் திருட்டு நடைபெறலாம். இதனை கர்நாடகா அரசுதான் கண்காணித்து நடவடிக்கை எடுக்க வேண்டும். தமிழகத்தை பொறுத்த வரை மாநில எல்லையான பிலிகுண்டுவில் தான் நீரின் அளவை அளப்போம். அதை வைத்துத்தான் நமக்கு எவ்வளவு நீர் வருகிறது என்பதை கணக்கிட முடியும். அந்த வகையில் நமக்கு வரவேண்டிய நீரை அவர்கள் கொடுத்தே ஆக வேண்டும். நீர் திருட்டு குறித்து அவர்கள் தான் நடவடிக்கை எடுக்க வேண்டும். நமக்கு வர வேண்டிய நீரை தமிழக அரசு கேட்டுப் பெற வேண்டும்.

**கேள்வி:** *புதியதாக பொறுப்பேற்றுள்ள த.வெ.க. அரசு 100 நாளை நிறைவு செய்திருக்கிறது. இதை எப்படப் பார்க்கிறீர்கள்?.*

**பதில்:** 100 நாளில் இதை சாதித்தோம் என ஏதாவது ஒன்றை சொல்லச் சொல்லுங்கள். 100 நாளில் இமயமலை அளவுக்கு சாதனை செய்ய முடியாது தான். ஆனால் ஒரு குன்று அளவிற்காவது சாதனை செய்துள்ளோம் என சொல்ல முடியுமா? பேசி கொண்டிருக்கிறார்களே தவிர எந்க் காரியத்திலும் இறங்கவில்லை.

**கேள்வி:** *பா.ஜ.க.,வோடு தி.மு.க. கூட்டணி வைப்பதாக த.வெ.க. கூறுகிறது. ஆனால் அதே த.வெ.க. பா.ஜ.க.வை எதிர்த்து பேசுவதில்லை என எதிர்க்கட்சிகள் கூறுகிறது இது குறித்து?.*

**பதில்:** நாங்கள் தொடர்ந்து சொல்லி வருகிறோம். தி.மு.க.விற்கும் பா.ஜ.க .வுக்கும் எந்த உறவும் இல்லை, ஒட்டும் இல்லை என இதை திட்டவட்டமாக சொல்லி உள்ளோம். ஐடியாலஜி பிரகாரமே எங்களுக்கு ஒத்து வராது. எங்களுடைய கொள்கை, மரபு வேறு. அரசியல் அளவிலாவது உருப்படுமா என்றால் அதுவும் சரியாகப் படவில்லை.

**ஒன்றியத்திலும் ஆட்சி மாற்றம் வேண்டும்!**

**கேள்வி:** *மல்லிகார்ஜுன கார்கே கலந்து கொண்ட கூட்டத்திற்கு பிறகு பா.ஜ.க.வினர் அந்த இடத்தை பூஜை செய்து தூய்மை செய்தது குறித்து?*

**பதில்:** அந்த பழமைவாதிகள் இன்னும் மாறவில்லை என தெரிகிறது. இவையெல்லாம் மாற வேண்டும் என கேட்டால் மத்தியிலும் சுயமரியாதை உள்ள கட்சி ஆட்சிக்கு வர வேண்டும்.

**மேகதாது அணை கட்டினால்?**

**கேள்வி:** *1969இல் நீர்வளத் துறை அமைச்சராக இருந்தவர் தான் காவிரி உரிமையை விட்டுக் கொடுத்ததாக தமிழ்நாடு முதலமைச்சர் குற்றம் சாட்டியிருந்தது குறித்து?*

**பதில்:** காவிரி பிரச்சினையை சுப்ரீம் கோர்ட் தீர்த்து வைத்து விட்டது. அதற்காக கர்நாடகா ஒரு காரணத்தை கற்பித்து வருகிறார்கள். இன்றைக்கு நீங்கள் சொல்கிறீர்கள் 10 டி.எம்.சி வர வேண்டியது தமிழ்நாட்டிற்கு ஏழு டி.எம்.சி.தான் வருகிறது என்று. ஆனால் மேகதாது அணையை கட்டினால் தமிழகத்திற்கு தண்ணீரே வராது. மழைப் பொழிவு உள்ள யாருக்கும் உரிமை கோராத இடத்தில் தான் மேகதாது அணையை கட்ட கர்நாடகா முயற்சிக்கிறது.

**டெல்டா பகுதிகள் மிகவும் வறண்டு போகும்!**

மேகதாது தமிழ்நாட்டின் உயிர்நாடி பிரச்சினை. மேகதாது கட்டி விட்டால் தமிழ்நாட்டில் பஞ்ச பிழைப்பு தான் பிழைக்க வேண்டும், டெல்டா பகுதிகள் மிகவும் வறண்டு போய்விடும் அதில் எந்த சந்தேகமும் இல்லை.

**கேள்வி:** *நயினார் நாகேந்திரன், முதல்வர் தாய் குறித்து அவதூறாகப் பேசியது குறித்து?*

**பதில்:** நான் அதை முழுசாக பார்க்கவில்லை. நயினார் நாகேந்திரன் அப்படி பேசுபவர் அல்ல. நிதானமான சுபாவம் கொண்டவர். ஆனால் அவர் சேர்ந்து இருக்கும் இடம் அப்படி இருக்குமா என தெரியவில்லை.

**கேள்வி;** *எம்.ஜி.ஆர். தனது இறுதிகாலத்தில் அ.தி.மு.க.வை தி.மு.க.வுடன் இணைப்பதாக ஏற்கனவே நீங்கள் கூறி இருந்தீர்கள். அ.தி.மு.க. இப்போது இருக்கும் நிலையில் எம்.ஜி.ஆர். இருந்திருந்தால் என்ன நடந்திருக்கும்?*

**பதில்:** எம்.ஜி.ஆர். இருந்திருந்தால் இன்றைக்கு இருக்கும் நிலையில் அ.தி.மு.க. இருந்திருக்காது, எம்.ஜி.ஆர். இல்லாததால் தான் இந்த நிலையில் உள்ளது. எம்.ஜி.ஆர். இறுதக் கட்டத்தில் அந்த நிலைக்கு வந்தார். அதுக்கப்புறம் அவர் தனது நிலையை மாற்றிக் கொண்டார். அந்த நிலைப்பாட்டை அவர் எடுத்ததாக பேச்சு வழக்கில் சொன்னது தான். அதைத் தவிர அதற்கு பெரிய ஆதாரம் கிடையாது.

**கேள்வி;** *அ.தி.மு.க.,வில் இருந்து த.வெ.க., கட்சிக்கு செல்வது குறித்து?*

**பதில்:** அது உட்கட்சி விவகாரம். அது குறித்து ஒன்றும் சொல்ல முடியாது. அவர்களுக்குச் சொல்லும் அளவிற்கு நான் பெரிய மனிதன் கிடையாது.

**கேள்வி:** *பெண்கள் குறித்து அவதூறாகப் பேசியதாக எழுந்த விவகாரத்தில் உதயநிதியை நீதி மன்றம் 12 மணி வரை கைது செய்ய தடைவிதித்தும் உடனடியாக கைது செய்யப்பட்டார். அதேபோன்று ஏன் நயினார் நாகேந்திரன் மீது நடவடிக்கை எடுக்கவில்லை?*

**பதில்:** பத்திரிகையாளர்களின் இந்தக் குமுறலை முதல்வர் ஜோசப் விஜய்க்கு அர்ப்பணம் செய்கிறேன். நயினார் நாகேந்திரன் மீது கை வைத்தால் இந்த ஆட்சியை மத்திய அரசு ஒரே நாளில் முடிவுக்குக் கொண்டு வந்து விடும்.

**கேள்வி:** *தமிழகத்தில் சட்டம் ஒழுங்கு எப்படி உள்ளது?*

**பதில்:** இன்றைக்கு பத்திரிகையை புரட்டினால் பக்கத்திற்கு 4 கொலை, பாலியல் பலாத்காரம் என செய்தி வருகிறது. அப்படிப்பட்ட செய்திகள் பத்திரிகையில் நிரம்பி வழிகிறது. இப்படித்தான் சட்டம் ஒழுங்கு உள்ளது. ஆனால் இதைப் பற்றி முதல்வர் அக்கறை கொள்ளவில்லை. இளைஞர் கொலை வழக்கில் கோஷ்டி மோதல் என சொல்கிறார்கள். அது சரியா? யாராக இருந்தாலும் நடவடிக்கை எடுக்க வேண்டும். உதயநிதியை சட்டசபையில் பேசக்கூடாது என்பதற்காக காரண காரியம் இல்லாமல் கைது செய்தார்கள். இளைஞர் கொலை வழக்கில் கோஷ்டி மோதலாக இருந்தாலும் அடித்துக் கொல்வது சரியா? இதுவரை எத்தனை பேரை கைது செய்துள்ளீர்கள்?

காட்பாடியில் அண்மையில் மட்டும் மூன்று கொலை நடந்துள்ளது. நான் எம்.எல்.ஏ.வாக இருந்தபோது 3 கொலை நடந்ததாக சரித்திரமே கிடையாது. ஆகையால் போலீசுக்கு முழு பவர் கொடுத்துள்ளார் கள் என தெரியவில்லை. சட்டம் ஒழுங்கு என்பது முதல்வர் கையில் இருக்கும். இந்த ஆட்சியில் சட்டம் ஒழுங்கிற்கு சவ அடிக்கு கடைசி அடி அடிக்கப் பட்டது போல் உள்ளது.

இவ்வாறு துரைமுருகன் அவர்கள் கூறினார்.



வேலூர் தெறகு மாவட்ட திமுக அலுவலகத்தில் இந்திய வர்த்தகத்தின் வளர்பிறை, மேனாள் ஒன்றிய வர்த்தக மற்றும் தொழில்துறை அமைச்சர் முரசொலி மாறன் அவர்களின் 93ம் ஆண்டு பிறந்த நாளை முன்னிட்டு அன்னாரின் திருவுருவப் படத்திற்கு மாவட்ட அவைத்தலைவர் தி.அ.முகமதுசகி மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். உடன் மாநகராட்சி மேயர் சுஜாதாஆனந்த குமார்,மாவட்ட பொருளாளர் எஸ்.தாமோதரன் உள்ளிட்ட மாநகர நிர்வாகிகள், மாநில கழக நிர்வாகிகள்,பகுதி கழக, வட்ட கழக நிர்வாகிகள், சார்பு அணிகளின் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



கன்னியாகுமரி மேற்கு மாவட்ட தி.மு.க. கலை இலக்கியப் பகுத்தறிவுப் பேரவை மாவட்ட அமைப்பாளர் வழக்கறிஞர் வி.இராஜேந்திர ராஜ் அவர்களின் மூத்த மகள் ஜீனா – மணமகன் பரத் திருமண விழா நாகர்கோயிலில்,புனித வளனார் மண்டபத்தில் நடைபெற்றது. நிகழ்ச்சியில், பேரவை மாநில செயலாளர் கலைமாமணி இறையன்பன் குத்தூஸ், துணைச் செயலாளர்கள் திருச்சி. எழில்மாறன் செல்வேந்திரன், சைதை எம்.எஸ். ஹரிபாபு, என்.எஸ். மாதேஸ்வரன், சென்னை தென்மேற்கு மாவட்ட அமைப்பாளர் ச.சண்முகநாதன் , மாவட்ட, ஒன்றிய, நகரக் கழக நிர்வாகிகள், அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், நண்பர்கள், கழக செயல்வீரர்கள் கலந்து கொண்டு வாழ்த்தினர்.